**இந்திய தூதரகம்**
**கோலாலம்பூர்**

## செய்தி அறிக்கை

## 2017ஆம் ஆண்டிற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு

## National Eligibility cum Entrance Test (NEET UG)

இந்தியாவில், பொது மருத்துவம் (MBBS) மற்றும் பல் மருத்துவம் துறையில் (BDS) இளங்கலை கல்வி மேற்கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள வெளிநாடு வாழ் இந்திய மாணவர்களும் (NRIs), மலேசிய மாணவர்களும் நடுவண் இடைநிலை கல்வி வாரியம் (Central Board of Secondary Education - CBSE) வழி நடத்தும் 2017ஆம் ஆண்டிற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வுவினை [NEET (UG] கட்டாயமாக எழுத வேண்டும் என இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆதார் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டை தங்களது அடையாள ஆதாரமாக பயன்படுத்தி, வெளிநாடு வாழ் இந்தியர்கள் அல்லது வெளிநாடு மாணவர்கள் பிரிவின் கீழ் தங்களது விண்ணப்பங்களை www.cbseneet.nic.in என்ற வலைத்தளத்தில் சமர்ப்பிக்கலாம். 25 வயதுக்கு உட்பட்டவர்கள் இந்த தேர்வினை எதிர்வரும் மே மாதம் 7, 2017ஆம் திகதி எழுதலாம். ***விண்ணப்பத்திற்கான இறுதி நாள் மார்ச், 1, 2017 ஆகும்.*** மூன்று (3) முறை மட்டுமே இந்த நுழைவுத் தேர்வினை எழுத வாய்ப்பு உள்ளதாக இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகம் (All India Institute of Medical Sciences (AIIMS) மற்றும் ஜவஹர்லால் பட்ட மேற்படிப்பு மருத்துவக்கல்வி & ஆராய்ச்சி நிறுவனம் (Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research [JIPMER) ஆகிய இரண்டு கல்வி நிறுவனங்களைத் தவிர, இந்தியாவில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவ கல்லூரிகளில் பயில 2017ஆம் ஆண்டிற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வுவினை [NEET (UG] கட்டாயமாக எழுத வேண்டும்.

இந்த நுழைவுத் தேர்வுவினை [NEET (UG] இந்தியாவிலுள்ள 84 நகரகங்களிலுள்ள 1500 மையங்களில் மட்டுமே எழுத முடியும். தகவலேட்டில் பின்னிணைக்கப்பட்டுள்ள ஏதேனும் மூன்று நகரங்களை மாணவர்கள் தேர்வு களமாக தேர்ந்தெடுக்கலாம்.

இந்த [NEET (UG] தேர்வினை எழுத விரும்பும் மாணவர்கள், இந்தியாவில் உள்ள 12ஆம் வகுப்புக்கு சம மதிப்பிலான வகுப்பில் இயற்பியல், வேதியியல், உயிரியல், உயிரித் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழியில் குறைந்தபட்சம் 50% மதிப்பெண்களைப் பெற்றிருக்க வேண்டும். மேலும், விண்ணப்பதாரர்கள், கட்டாயமாக தகுதி தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இச்சூழ்நிலைகளில் முன் பணங்கள் திரும்பி கொடுக்கப்பட மாட்டாது. சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களும் திரும்பி கொடுக்கப்பட மாட்டாது. இந்த தேர்வுக்கான முடிவுகள் ஜூன் 8, 2017ஆம் திகதி அறிவிக்கப்படும்.

ЖЖЖ